***கவனிக்க*** *.– 12.07.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1820 - 2013 ජූලි මස 19 වැනි සිකුරාදා - 2013.07.19**

*1820 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## *பகுதி IV(அ) – மாகாண சபைகள்*

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1684 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| பதவிகள் – வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1684 |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |
| | - |


***கவனிக்க.*** – *(i) பாராளுமன்ற புலமைப்பரிசில் சபை (நீக்கம்) சட்டமூலம் 2013, மே மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

*(ii) குல்லியத்துல் இமாம் சாபிஈ அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, யூன் மாதம் 21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

### ***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

### ***முக்கிய அறிவித்தல்கள்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2013, ஓகத்து மாதம் 08 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, யூலை மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

## வடமேல் மாகாண மாகாண சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் வாசிக்கப்படுகின்ற 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கமும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டங்களினால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் கீழான கட்டளை*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் வாசிக்கப்படுகின்ற 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கமும் 1992 ஆம் ஆண்டின் II ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டங்களினால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வடமேல் மாகாண சபையின் முதலமைச்சரும் நிதி, திட்டமிடல், நீதியும் சமாதானமும். உள்ளூராட்சி மன்றமும் மாகாண நிருவாகமும், மனிதவள, கல்வியும் கலாசார நடவடிக்கை, காணி, போக்குவரத்து, சூழல், சுற்றுலா, முதலீட்டு நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்களும் விநியோக அமைச்சர் அதுல சரத் குமார விஜேசிங்ஹ ஆகிய நான் வடமேல் மாகாணத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளருக்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளதும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை 1 ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கமும் 1992 ஆம் ஆண்டின் II ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க (திருத்த) சட்டங்களினால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க கூட்டுறவு சங்க சட்டமும் அதன் கீழ் விதிக்கப்பட்டுள்ள விதிகளின் கீழ் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளருக்கு விதிக்கப்பட்டுள்ள உரிய உப அட்டவணையில் III ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா அதிகாரமும் உப அட்டவணையில் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி தொடக்கம் இத்துடன் கையளிக்கின்றேன்.*

அதுல சரத் குமார விஜேசிங்ஹ,
முதலமைச்சரும் நிதி, திட்டமிடல், நீதியும் சமாதானமும்,
உள்ளூராட்சி மன்றமும், மாகாண நிருவாக,
மனிதவள, கல்வியும் கலாசார நடவடிக்கை,
காணி, போக்குவரத்து, சூழல், சுற்றுலா, முதலீட்டு
நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும்
உணவு வழங்களும் விநியோக அமைச்சரும்,
வடமேல் மாகாண மாகாண சபை

*2013, யூன் மாதம் ஆந் திகதி.*

### அட்டவணை

| | I ஆம் நிரல் | II ஆம் நிரல் | III ஆம் நிரல் |
|---|---|---|---|
| 1. | தென்னகோன் முதியன்சேலாகே டிங்கிரி பண்டா தென்னகோன் | 2013.06.01 | கூட்டுறவு சங்க சட்டத்தின் 44 (6) பிரிவின் கீழ் ஆணையாளரும் பதிவாளரினதும் எல்லா அதிகாரமும் |
| 2. | தோனிமுனி செல்ரன் சோமப்பிரிய மென்டிஸ் | | |
| 3. | அதபத்து ஹேரத் முதியன்சேலாகே ரணசிங்ஹ பண்டார | | |
| 4. | மெதகெதர சுகத் மெதகெர | | |

7-629

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## கிழக்கு மாகாண மேல் நீதிமன்றம்

*பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத அரசுடைமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் முத்திரையிடப்பட்ட விலைமனு மூலம் விற்பனை செய்வதற்காக மேல் நீதிமன்றத்தினால் கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் கோரல் - 2013*

*பொத்துவில் மாவட்ட/ நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத அரசுடைமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் பகிரங்க விலை மனுக்கோரல் நடைமுறை மூலம் விற்பனை செய்யப்பட இருக்கின்றன. இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 2013 ஆவணி மாதம் 06 ஆந் திகதி அன்று பி. ப. 3.00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.*

விண்ணப்பங்கள் யாவும் மேல் நீதிமன்ற நீதிபதி, மேல் நீதிமன்றம், கல்முனை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். கடித முகப்பின் இடது பக்க மேல் மூலையில் "பொத்துவில் மாவட்ட/நீதிவான் நீதிமன்றத்தினால் அரசுடைமையாக்கப்பட்ட வாகனத்திற்கான விலை மனு" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் மேல் நீதிமன்ற முத்திரை பொறிக்கப்பட்ட மற்றும் கணக்காளரின் கையொப்பம் இடப்பட்ட படிவங்களில் மாத்திரம் விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

கேள்விப்பத்திர நடைமுறையூடாக விற்பனை செய்யப்படவுள்ள மோட்டார் வாகனங்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவரும் இருப்பின் விலைமனுக்கோரும் இறுதித் திகதியில் பி.ப. 3.00 மணிக்கு முன்னர் தமது உறுதிப்படுத்தப்பட்ட உரிமை கோரிக்கையினை முன் வைக்க வேண்டும். தவறும் பட்சத்தில் அவை தொடர்பாக எந்த நடவடிக்கையும் ஏற்கப்படமாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றோம்.

மோட்டார் வாகனங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான விலைமனு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதற்காக மீள் செலுத்தப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் நூறு 100 ரூபாயுடன் பின்வரும் அடிப்படையிலான வைப்புப் பணத்தினை செலத்துதல் வேண்டும். இவ்விண்ணப்பப்பத்திரம் வழங்குதல் 2013, ஆவணி மாதம் 6 ஆந் திகதியன்று மு. ப. 11.30 மணியுடன் நிறுத்தப்படும்.

| தொடர் இலக்கம் | வாகன விபரம் | வகை | விற்பனைக்காக வழங்கப்பட்ட இலக்கம் | வைப்பு கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | TATA Dimobatta - 01 | TATA- ACE | MCP/01/2013 | 7,500 0 |
| 02 | Tafe Tractor - 01 | TAFE - Tafe 45 DI | MCP/02/2013 | 7,500 0 |

குறிப்பிட்ட கால நேரத்திற்குள் பெற்றுக்கொள்ளப்படும் முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஆவணி மாதம் 6 ஆந் திகதியன்று பி. ப. 3.00 மணிக்கு பிரசன்னமான கேள்விமனு சமர்ப்பித்தவர்கள் முன்னிலையில் மேல்நீதிமன்ற சம்பாத்திய குழுவினால் திறக்கப்படும்.

விலை மனுவின் மூலம் கூடிய விலையைக் குறிப்பிட்டு சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு அப்பொருளை விற்பனை செய்வதற்கான அங்கீகாரத்தினை மேல் நீதிமன்ற சம்பாத்திய குழு பிறப்பிக்கும். இதனடிப்படையிலான விற்பனை நடைமுறையினை குறிப்பிட்ட நீதிமன்றமான பொத்துவில் மாவட்ட/நீதிவான் நீதிமன்றம் மேற்கொள்ளும்.

விலைமனு கோரலின் ஊடாக விற்பனை செய்யப்படவிருக்கும் மோட்டார் வாகனங்களை நேரடியாக சமுகமளித்து கடமை நாட்களில் காலை 10.00 மணி தொடக்கம் பி. ப. 2.30 மணி வரைக்கும் பொத்துவில் மாவட்ட/நீதிவான் நீதிமன்ற பதிவாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

விற்பனை செய்யப்படவிருக்கும் மோட்டார் வாகனங்களுக்கு மதிப்பீட்டுப் பெறுமதி கணிக்கப்பட்டுள்ளதால் சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்களில் குறிப்பிட்ட பெறுமதி குறைவானதாகக் காணப்படும் சந்தர்ப்பங்களில் அவ்வாகனங்களினை விற்பனை செய்வதிலிருந்து நிறுத்தி வைப்பதற்கு நீதிமன்றுக்கு பூரண அதிகாரம் உண்டு.

விற்பனை செய்யப்படும் வாகனம்/வாகனங்களை பணம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்ற பின்னர் உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்றப்படுதல் வேண்டும். மேலும் எல்லா கொடுப்பனவுகளும் பணமாக செலுத்தப்படுதல் வேண்டும். காசோலைக் கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

| தொடர் இலக்கம் | வழக்கு இலக்கம் | வாகன விபரம் | வர்க்கம் |
|---|---|---|---|
| 01 | 12958/ PC/ 10 | TATA Dimobatta - 01 | TATA- ACE |
| 02 | 10553/ MT/10 | Tafe Tractor - 01 | TAFE - Tafe 45 DI |

மேல் நீதிமன்ற ஆணையாளர்,
கிழக்கு மாகாண மேல் நீதிமன்றம்,
கல்முனை.

7-410

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.